www.Padasalai.Net

தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை – 06

ந.க.எண். 070358/அ5/இ3/2024, நாள். 16 .09.2024

பொருள்: பள்ளிக் கல்வி – பொது சார்நிலை பணி– காரைக்குடி – Central Electrochemical Research Institute வளாகத்தில் "OPEN DAY AT CECRI" என்ற பெயரில் அனைத்து ஆய்வக ஆராய்ச்சி வசதிகளையும் பார்வையிடுதல் மற்றும் அந்நாளை பணிநாளாக கருதுதல் – தொடர்பாக

பார்வை: தமிழ்நாடு அளவிலான நேரடி நியமன பள்ளி ஆய்வக உதவியாளர்கள் சங்க கடிதம் நாள் 16.09.2024

-------

பார்வைக் காணும் கடிதம் கடிதத்தில், காரைக்குடி Central Electrochemical Research Institute வளாகத்தில் நடைபெறும் "OPEN DAY AT CECRI" அனைத்து ஆய்வக ஆராய்ச்சி வசதிகளையும் தடையின்றி பார்வையிட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஆய்வக உதவியாளர்கள் பலர் ஆர்வத்துடன் கலந்து கொண்டு ஆய்வக வசதிகள் குறித்த தெளிவு பெறவும், அதனை அரசு பள்ளி மாணவர்களின் ஆய்வக கல்வி வளர்ச்சிக்கு பயன்படுத்த ஆர்வத்துடன் உள்ளதாகவும், 26.09.2024 வியாழக்கிழமை அன்று நடைபெறும் "OPEN DAY AT CECRI" ல் விருப்பத்தின் பேரில் மாவட்டத்திற்கு 2 ஆய்வக உதவியாளர்கள் கலந்து கொள்ளவும் (அந்த நாளை பணிநாளாக கருதவும்), பார்வையிடவும் கோரி கடிதம் இவ்வியக்ககத்தில் பெறப்பட்டுள்ளது.

எனவே மாணவர்களின் நலன் கருதி ஆய்வக உதவியாளர்களில் ஆர்வத்துடன் கலந்து கொள்ள விருப்பம் உள்ளவர்களில் மாவட்டத்திற்கு 2 பேர் வீதம் காரைக்குடி Central Electrochemical Research Institute வளாகத்தில் நடைபெறும் "OPEN DAY AT CECRI"–ஐ பார்வையிட அனுமதி வழங்கி அனுப்பி வைக்குமாறும் அந்த நாளை பணிநாளாக கருதவும் அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலருக்கும் அறிவுறுத்தப்படுகிறது.

பள்ளிக்கல்வி இயக்குநர்

16/9/24

பெறுநர்:
அனைத்து மாவட்ட
முதன்மைக் கல்வி அலுவலர்